**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 56/2018**

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 19.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : காமராஜ் Father's Name : நாராயணன்

ஆரம்ப நேரம் : 12.23 P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

1. தாவா சொத்து சற்குணம் முதலியார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கடந்த 12.04.2005-ல் சற்குணம் முதலியார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சற்குணம் முதலியாருக்கு நான் வாரிசுதாரர் என்று சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சற்குணம் முதலியார் உயிருடன் இருக்கும்பொழுது தாவா சொத்து குறித்து கடந்த 28.08.1998 அன்று நரேஷ், பிரகாஷ் ஆகியோர்களுக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

2. மேற்படி உயில் எழுதப்பட்ட காலகட்டத்தில் நரேஷ் என்பவருக்கு வயது 9 என்றாலும், பிரகாஷ் என்பவருக்கு வயது 7 என்றாலும் சரிதான். தற்பொழுது நரேஷ், பிரகாஷ் ஆகிய இருவருக்கும் வயது என்ன என்றால் பிரகாஷிற்கு என்ன வயது என்றால் 33 வயது,

நரேஷிற்கு 35 வயது ஆகும். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பொழுது நரேஷிற்கு 27, பிரகாஷிற்கு 25 என்றாலும் சரிதான். தாவா சொத்து மேற்படி நரேஷ், பிரகாஷ் இருவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனவே தாவா சொத்திற்கு உரிமையாளரான நரேஷ், பிரகாஷ் இருவரும் இவ்வழக்கை தாக்கல் செய்யாமல் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல, நான் காப்பாளர் என்ற முறையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேளன்.

3. வா.சா.ஆ.2-ன்படி ச.எண்.79/5-ல் உள்ள சொத்துக்காகத்தான் உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ச.எண்.79/5-ல் உள்ள சொத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், மாறாக ச.எண். 79/5A2 என்ற ச.எண்ணில் உள்ள அரசிற்கு சொந்தமான நிலத்திற்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ச.எண். 79/5A2-ல் உள்ள நிலமானது நத்தம் புறம்போக்கு நிலமாகும், அந்த நிலம் கடந்த 40 ஆண்டுகளாக எங்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது.

4. ச.எண். 77/9A-ல் உள்ள நிலமானது வண்டிப்பாதை என்றால் சரிதான். மேற்படி இடத்தில் எனது ஆக்கிரமிப்பை அகற்ற கோரி 7-ஆம் பிரதிவாதியால் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட உண்மையை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, மேற்படி அறிவிப்பை நான் பெற்றுக்கொள்ளவில்லை, அதற்காக தடையுத்தரவு பெற்றுவிட்டேன்.

5. அரசிற்கு சொந்தமான நிலத்தில் உள்ள எனது ஆக்கிரமிப்பை அகற்ற 7-ஆம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட அறிவிப்பை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நில ஆக்கிரமிப்பு அகற்றும் சட்டம் 1905 பிரிவு 14-ன் படி இவ்வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றும் அறிவிப்பிற்கு எதிராக வருவாய் கோட்டாட்சியரிடம் மேற்கண்ட

சட்டத்தின் பிரிவு 10-ன் கீழ் மேல்முறையீடு செய்ய வேண்டுமே தவிர இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

6. தாவா சொத்திற்கு உரிமையாளர்களான நரேஷ், பிரகாஷ் ஆகியோர்களால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படாததாலும், வருவாய் கோட்டாட்சியரிடம் முறையான மேல் முறையீடு செய்யாததாலும் இவ்வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல, எனக்கு எந்த வகையிலும் உரிமையில்லாத சொத்திற்கு நான் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.

முடிவு நேரம்: 12.41 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.56/2018, Dt.19.11.2025.